# தமிழ்நாடு மூத்தக்குடிமக்கள் மாநில கொள்கை வரைவு - 2022



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை வரைவு குழுவினரால்
சமர்ப்பிக்கப்பட்டது

**05.01.2022**

<u>வரைவு குழு உறுப்பினர்கள்:</u>

1) திருமதி.த. ரத்னா, இ.ஆ.ப., இயக்குநர், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை
2) முனைவர்.எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., (ஓய்வு), மூத்த குடிமக்கள் ஆதரவு மன்றம்
3) மருத்துவர். க.ச. சாந்தி, பேராசிரியர் (ம) துறைத் தலைவர், முதியோர் நல மருத்துவ பிரிவு, சென்னை மருத்துவ கல்லூரி
4) திரு.சா. எட்வின்பாபு, இணை இயக்குநர், புரோகிராம்ஸ், ஹெல்ப் ஏஜ் இந்தியா
5) திரு. வே. சிவக்குமார் மாநில தலைவர் – தமிழ்நாடு, ஹெல்ப் ஏஜ் இந்தியா
6) முனைவர். செ. ராஜா சாமுவேல், முதல்வர், சென்னை சமூகப்பணி கல்லூரி
7) திருமதி.ப.க. வதனி, உதவிப் பேராசிரியர் (ம) முதியோர் மைய ஒருங்கிணைப்பாளர்
8) திரு.பெ. ராமஜெயம், உதவி பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்
9) திரு.முரளி மல்லிகார்ஜுனா, மூத்த ஆராய்ச்சி கொள்கை மேலாளர், ஜெ-பால், தெற்கு ஆசியா
10) திருமதி.வனேசா பீட்டர், உறுப்பினர், நகர்ப்புற வீடற்றவர்களுக்கான மாநில கண்காணிப்புக்குழு உறுப்பினர்

## பின்னணி

இன்றைய காலகட்டத்தில் தமிழ் நாட்டின் மக்கள்தொகையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. கருவுறுதல் மற்றும் இறப்பு விகிதங்களின் சரிவு, அரசு மற்றும் தனியார் சுகாதாரத் துறைகளில் மருத்துவ முன்னேற்றங்களால் ஆயுட்காலம் நீட்டிப்பு, பொது சுகாதார திட்டங்களை செயல்படுத்துவது போன்றவற்றால் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) வெளியிட்டுள்ள "இந்தியாவில் முதியோர்கள் 2021" என்ற அறிக்கையின்படி, 2011-ல் 75.10 இலட்சமாக இருந்த மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 2021- ல் 1.04 கோடியாக உயர்ந்தும், 2031-ல் 1.42 கோடியாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் 13.6% மூத்த குடிமக்களைக் கொண்ட தமிழ்நாடு 2031 ஆம் ஆண்டில் 18.2% உடன் மக்கள் தொகையில் மூத்த குடிமக்களின் இரண்டாவது அதிக விகிதத்தைக் கொண்டிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது[1]

உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள மூத்த குடிமக்கள் அடுத்த தலைமுறைக்கு அவர்களின் வாழ்க்கை அனுபவங்களுடன் வழிகாட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். முதியோர் ஒரு அறிவின் பொக்கிஷ பெட்டகமாக இருக்கின்றனர். வளமான அனுபவங்கள் மற்றும் திறன்களைக் கொண்டு அவர்கள் கடந்த கால வரலாறு, சமூக கட்டமைப்பு, பொருளாதார முறை மற்றும் கலாச்சார நடைமுறைகள் ஆகியவற்றின் வாழும் சான்றுகளாக திகழ்கின்றனர். தமிழ்நாட்டில், ' ஆத்திச்சூடி ' - அவ்வையார் (பெரிய பாட்டி) எழுதிய ஒற்றை வரி செய்யுள்கள் தொடக்கப்பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு நுழைவு மட்டத்திலேயே ஒழுக்கநெறிகளை அமைப்பதற்கான அடிப்படை பாடத்திட்டமாக உள்ளது. சமுதாயத்தில் அனைத்துத் தரப்பு முதியோர்களையும் அறிவு மற்றும் ஞானத்தின் கலங்கரைவிளக்கம் மற்றும் "வழிகாட்டும் சக்தியாக' நடத்துவது இச்சமூகத்தின் தொடரும் பாரம்பரியமாக உள்ளது. அகில உலக புகழ்பெற்ற புலவர் திருவள்ளுவர், "மா மனிதர்களின் உதவியை நாடுதல்" (அதிகாரம்- 45: பெரியாரைத் துணைக்கோடல்) என்ற

[1] மூத்த குடிமக்கள் என்றால், 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எட்டிய இந்திய குடிமகன் என்று பொருள்படும் – பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 (இந்திய அரசு). 2021 ஆம் ஆண்டிற்கான தரவு, 'இந்தியாவில் முதியோர்கள், 2021' அறிக்கையின் கணிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஏனெனில் 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு COVID – 19 தொற்று நோய் காரணமாக மேற்கொள்ளப்படவில்லை.

தலைப்பில் ஒரு தனிப்பகுதியை எழுதியுள்ளார். இக்குறள் மூத்த குடிமக்களின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகிறது.

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணி தமராக் கொளல்" (குறள்: 443),

"வலிமையான உள்ளம் கொண்ட மனிதர்களைப் போற்றவும், அவர்கள் அனைவரையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வது என்பது கிடைத்தற்கரிய பொக்கிஷம், பரிசாக கிடைப்பது போன்றது. (ஜி.யு. போப் - பழம்பெரும் தமிழ் அறிஞர்)".

மறுபுறம், மூத்த குடிமக்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன், ஒவ்வொரு நாளும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதிகரிக்கிறது, இதில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு, தகவல், தேவைக்கேற்ற தங்குமிடம் மற்றும் சுற்றுச்சூழல், கைவிடப்படும் சூழ்நிலை, துன்புறுத்தல் மற்றும் உரிமைகள் மறுப்பு போன்றவவை அடங்கும். எனவே, முதுமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், மூத்த குடிமக்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

வறுமை, பட்டினி, பாகுபாடுகளை ஒழிக்க சமூக நீதியின் சகாப்தத்தின் தொடக்கத்தை முன்வைத்த திராவிட இயக்கத்தின் பாரம்பரியத்தைத் தொடர்ந்து, மூத்த குடிமக்களுக்கான மாநிலக் கொள்கை 2022 னை உருவாக்குவதன் மூலம், தமிழ்நாட்டின் மூத்த குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதையும், வளப்படுத்தவதையும், அதிகாரமளிப்பதையும் தற்போதைய தமிழக அரசு தலையாய செயலாக கருதுகிறது.

இந்தக் கொள்கையானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 41வது பிரிவை அடிப்படையாகக் கொண்டது - "அரசு தன் பொருளியல் திறனுக்கும் வளர்ச்சிக்கும் அடங்கியவாறு வேலை பெறுதல், கல்வி பெறுதல் மேலும் வேலையின்மை, முதுமை, பிணி, உடல் ஊனம் ஆகிய நேர்வுகளிலும பிற தகாத நேர்வுகளிலும், பொது நல உதவி பெறுதல் இவற்றிற்கான உரிமையினை எய்திடுவதற்கு பயனுறு ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்". "முதியோருக்கான ஐக்கிய நாடுகளின் கோட்பாடுகள் -1991, மூத்த குடிமக்கள் மீதான தேசியக் கொள்கை -1999, முதுமை குறித்த மாட்ரிட் செயல் திட்டம் - 2002,

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் சட்டம்- 2007, மற்றும் ஐக்கிய நாடுகளின் "ஆரோக்கியமான முதுமைக்கான பத்தாண்டு" பிரகடனம் -(2021-2030) - மூத்த குடிமக்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் நிலையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை நோக்கி செல்கிறது. இவை அனைத்தையும் உள்ளடக்கிய பராமரிப்பு மற்றும் நலவாழ்வு ஆகியவற்றின் வழிகாட்டும் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கான தமிழக அரசின் அர்ப்பணிப்பினை இந்தக் கொள்கை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**முன்னுரை:**

"மூத்த குடிமக்கள் மீதான மாநிலக் கொள்கை - 2022" ஆனது தமிழ்நாட்டின் மூத்த குடிமக்களின் பல்வேறு பிரச்சனைகளை களைவதில் ஒரு நியாயமான மற்றும் சமமான அணுகுமுறையைப் பின்பற்றும்.

மூத்த குடிமக்களின் சமூக பாதிப்புகள் மற்றும் பாலினம், இயலாமை, மனநலம் ஆகியவற்றின் இடையிலான சிக்கல்களை உணர்ந்து, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து, சுகாதார சேவைகள், பாதுகாப்பு, துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பு, தகவல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், வீட்டுவசதி மற்றும் உகந்த சூழல் மற்றும் சட்ட உதவி போன்றவை சரியான நேரத்தில் கிடைக்கப்பெறுவதை இக்கொள்கை உறுதி செய்யும்.

இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இலக்குகளை அடைய தமிழக அரசு, அரசு அதிகாரிகள், துறை வல்லுநர்கள், அர்ப்பணிப்புள்ள தனிநபர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், முதியோர் பாதுகாப்பிற்கென செயல்படும் கல்வி நிறுவனங்கள், மருத்துவ வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகியோருடன் இணைந்து, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மூத்த குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கான சிறந்த சேவைகளை வழங்குவதற்கு இக்கொள்கை வழிவகுக்கும்.

**தொலைநோக்கு பார்வை**

மாநிலத்தின் மூத்த குடிமக்களுக்கு முழுமையான முறையில் சேவையாற்றுவதன் மூலம் அவர்கள் பாதுகாப்பான, ஆரோக்கியமான, சுறுசுறுப்பான மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழிவகை செய்தல். பொது மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் முதுமைக்கேற்ற சமுதாயத்தை

ஊக்குவித்தல் மற்றும் தமிழ்நாட்டில் முதியோர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

**இலக்கு**

மூத்த குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, பொது மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து ஒவ்வொரு மூத்த குடிமக்களுக்கும் சுகாதாரம், ஊட்டச்சத்து, பாதுகாப்பு, நிதி நிலைத்தன்மை, தங்குமிடம் மற்றும் துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பை சரியான நேரத்தில் அளிப்பதை அரசு உறுதி செய்தல்.

வாழ்விடம், பாலினம், சாதி, வகுப்பு, மதம் அல்லது இயலாமை ஆகியவற்றின் அடிப்படையில் மூத்த குடிமக்களிடம் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்பதை உறுதி செய்வதன் மூலம், அவர்களது நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான தடுப்பு, ஊக்குவிப்பு, மற்றும் மறுவாழ்வை உள்ளடக்கிய அணுகுமுறையை பின்பற்றுதல்.

**கொள்கையின் வழிகாட்டி பகுதிகள்**:

1. ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து
2. சமூக பாதுகாப்புத் திட்டங்கள்
3. வாழ்வாதாரம்/வருவாய் பாதுகாப்பு
4. வீட்டுவசதி மற்றும் சுற்றுச்சூழல்
5. இடரின்மை மற்றும் பாதுகாப்பு
6. நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு
7. விழிப்புணர்வு மற்றும் கல்வி
8. ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதல்
9. பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்பு
10. மூத்த குடிமக்கள் நலனுக்கான இயக்ககம்

## I. ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து

ஆரோக்கியமும் ஊட்டச்சத்தும் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியமானதாகும். முதுமையின் போது நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்பது ஒரு தனிநபர் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்ட முயற்சி மற்றும் ஆதரவான சூழலின் விளைவே ஆகும். போதுமான ஊட்டச்சத்துக்கான அணுகல், ஆரோக்கியமான பராமரிப்பு, நாள்பட்ட

நோய்களின் தொடக்கத்தை குறைத்தல், உயிர்ச்சக்திக்கு பங்களித்தல் மற்றும் தனித்து இயங்கக்கூடிய சுதந்திரத்தை பெற போதுமான ஊட்டச்சத்து அத்தியாவசிமானதாகும்.

நோய் மற்றும் இயலாமையைத் தடுப்பதற்கும், தாமதப்படுத்துவதற்கும் மற்றும் முதியோர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் உரிய நேரத்தில் தடுப்பு, குணப்படுத்த கூடிய மருத்துவ பராமரிப்பு வசதிகள் மற்றும் மறுவாழ்வு சேவைகளைப் பெறுவது மூத்த குடிமக்களின் உரிமையாகும். இதில் பாலியல் ஆரோக்கியம், நோய் தடுப்பு, ஆரம்பகால நோயறிதல் மற்றும் சிகிச்சை ஆகியனவும் அடங்கும்.

தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டு J-PAL நிறுவனத்தால் நடத்தப்பட்ட முதியோர்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்த நீண்ட கால ஆய்வு, முதியோர்களிடத்தில் அதிக அளவில் நோய்வாய்ப்படுதல் மற்றும் நோய் பாதித்ததைக் குறித்து குறைந்த அளவிலே சுயஅறிக்கை அளித்தல் போன்றவை அவர்களுக்கு உள்ள விழிப்புணர்வு இடைவெளியை குறிக்கிறது என்று கண்டுப்பிடிக்கப்பிடிக்கப்பட்டுள்ளது. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகிய இரண்டும் மூத்த குடிமக்களிடையே உள்ள ஏழு பொதுவான நோய்களில் பொதுவாக காணப்பட்டாலும் 34% முதியவர்கள் மட்டுமே சர்க்கரை நோய் பரிசோதனை செய்திருக்கிறார்கள் என்றும் 9% முதியவர்கள் மட்டுமே இரத்த கொழுப்பு பரிசோதனை செய்திருக்கிறார்கள் என்றும் ஆய்வின் முடிவு தெரிவிக்கிறது. வயது அதிகரிப்பதற்கேற்ப இப் பொதுவான நோய்களும் அதிகரித்து 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் சராசரியாக 2 நாள்பட்ட நோய்களாகளால் பாதிக்கப்படுவதால் விழிப்புணர்வு மற்றும் சுகாதார வசதிகள் எளிதில் பெறும் சூழலை அதிகரிக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மூத்த குடிமக்களில் 4.7% பேருக்கு நரம்பியல் கோளாறு உள்ளது என்றும் இதில் 75% பேர் மறதி நோய் (டிமென்ஷியா) மற்றும் 8% பேர் நடுக்கவாத (பார்கின்சன்) நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

முதுமையில் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான ஆதரவான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பாகும் முதியோர்களின் சிறப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட சுகாதாரச் சேவைகள், பொருத்தமான மருத்துவப் பல்கலைக்கழகப் பாடத்திட்டம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளில் முதியோருக்கான மருத்துவம் அறிமுகப்படுத்தப்படுவதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். சுகாதாரப்

மற்றும் பாதுகாப்பு சேவை ஆகியவை, மூத்த குடிமக்களின் குறிப்பிட்ட மற்றும் சிறப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணியாளர்கள் மற்றும் வசதிகளுக்குத் தேவையான பயிற்சியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதிகரித்து வரும் முதியோர்களுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சைக்கான தேவைகளை ஈடு செய்ய போதுமான கொள்கைகள் தேவை.

சுகாதார மேம்பாடு மற்றும் நோய் தடுப்பு, உதவி தொழில்நுட்பம், மறுவாழ்வு பராமரிப்பு, மனநல சேவைகள், ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் ஆதரவான சூழல்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**1. அனைத்து மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் முதியோர் நல பிரிவுகளை நிறுவுதல்**

1.1 அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகள்/மருத்துவக் கல்லூரிகளில் முதியோர் சிகிச்சைப் பிரிவு அரசால் நிறுவப்படும்.புறநோயாளிகள் பிரிவு, பரிசோதனை ஆய்வகம் மற்றும் மருந்தகத்தில் மூத்த குடிமக்களுக்கான பிரத்யேக வரிசை அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

1.2 மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அனைத்து மூத்த குடிமக்களும் ஒரு பயிற்சி பெற்ற நிபுணரால் முதியோர் பற்றிய விரிவான மதிப்பீட்டை மேற்கொள்வதை அரசு கட்டாயமாக்கும்.

1,3 தமிழக அரசு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் முதியோர் மருத்துவ முதுகலை படிப்பை (டாக்டர் ஆஃப் மெடிசின் - எம்.டி) உருவாக்கவும், கல்வி இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் முயற்சிக்கும். தனியார் மருத்துவக் கல்லூரிகளும் இதைப் பின்பற்றுவதை அரசு கட்டாயமாக்கும்.

1,4 அரசு, இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு செவிலியர் மற்றும் துணை மருத்துவப் படிப்பின் பாடத்திட்டத்தில் முதியோர் நலப்பிரிவினை சேர்ப்பதை கட்டாயமாக்கும்.

1,5 கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டியூட் வளாகத்தில் அமைந்திருக்கும் முதியோர்களுக்கான தேசிய மையத்தை முதியோர் பராமரிப்புக்கான சிறப்பு மையமாகப் செயல்படுத்தப்பட அரசு ஊக்கம் அளிக்கும்.

**2. சிறப்பு மையங்கள் நிறுவுதல் - முதியோர் பகல்நேர பராமரிப்பு மையம், மனநல மையம், தீராத நோயால் பாதிக்கப்பட்டு படுக்கைக்கிடையான முதியோர்க்கான சிகிச்சை/ பராமரிப்பு (Palliative care / hospice ) மையம், மறதி நோயுற்றோர் (டிமென்ஷியா) பராமரிப்பு மையம், மாற்றுத்திறனாளி முதியோர்களுக்கான மறுவாழ்வு மையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மையம்.**

2.1 முதியோர் சிறப்பு மையங்கள் திறம்பட செயல்பட அரசு பலதுறை வல்லுநர்களை கொண்ட குழுவைநியமித்து உரிய பயிற்சிகளை அளித்து முதியோரின் முழுமையான தேவைகளை நிவிர்த்தி செய்யும் .

2.2 அரசு மற்றும் தனியார் பராமரிப்பு மையங்களில் முதியோர் பகல்நேர பராமரிப்பு மையம், மனநல மையம், தீராத நோயால் பததிக்கப்பட்டு படுக்கைக்கிடையான முதியோர்க்கான சிகிச்சை/ பராமரிப்பு (Palliative care / hospice ) மையம், மறதி நோயுற்றோர் (டிமென்ஷியா) பராமரிப்பு மையம், மாற்றுத்திறனாளி முதியோர்களுக்கான மறுவாழ்வு மையம் ஆகியவற்றை நிர்வகிப்பதற்கான புதிய வழிகாட்டுதல்களை அரசு உருவாக்கும்.

2.3 ஆரம்ப சுகாதார (PHCs) மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களில் (UPHCs)உள்ள மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மனநலம் மற்றும் மனநோய் பிரச்சனைகள் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு தகுதி உள்ளவர்களாக இருப்பதை அரசு உறுதி செய்யும். மறதி நோய் (டிமென்ஷியா / அல்சைமர்) நோய், நடுக்கவாதம் (பார்கின்சன்) நோய், மனச்சோர்வு போன்றவற்றை ஆரம்ப கட்டங்களில் கண்டறிய ஒரு சிகிச்சை குழுவுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

2.4 மாற்றுத்திறனாளி மூத்த குடிமக்களுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்களை பெறுவதற்கு அரசு உறுதி செய்யும்.

**3. மூத்த குடிமக்களுக்கான அனைத்து சுகாதார சேவைகளை சரியாக அணுகுதல்**

3.1 பொது சுகாதாரம், செவித்திறன் குறைபாடு மற்றும் பார்வை தொடர்பான பிரச்சனைகள்/ பார்வை மறுசீரமைப்பிற்கான ஆரம்பகால பரிசோதனை, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை ஆகியவற்றில் கவனம் செலுத்திட

தொடர்ச்சியான மருத்துவ முகாம்களை நடத்திட அரசு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

3.2 அரசு, கிராமபுற ஆரம்ப சுகாதார (PHCs) மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHCs) மூலம் குறிப்பாக 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு விரிவான மருத்துவக் காப்பீட்டை வழங்கும்.

3.3 தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை, அவர்களது குடும்ப உறுப்பினர்களைத் தவிர, பணியாளர்களைச் சார்ந்து உள்ள பெற்றோர்களுக்கும் பணியாளர்களின் சம்பளத்திலேயே இருந்து கூடுதல் பிரீமியம் பிடித்தம் செய்யப்பட்டு நீட்டிக்கப்படும்.

3.4 முதியோர்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகளை அவர்களின் வீடுதேடி வழங்குவதை உறுதிசெய்வதற்காக "அரசு மக்கள் தேடி மருத்துவம்" சேவைகளை தீவிரப்படுத்தும்.

3.5 "மக்கள் தேடி மருத்துவம்" திட்டத்தின் மூலம் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள், புற்றுநோய் மற்றும் பிற தொற்று ஏற்படாத நோய்கள் போன்ற முதியோரின் நாட்பட்ட நோய்களுக்கான மாதாந்திர மருந்துகள் / டயப்பர்கள் வழங்க அரசால் ஏற்பாடு செய்யப்படும்.

3.6 அரசு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து மூத்த குடிமக்களுக்கு தேவை அடிப்படையிலான உதவி உபகரணங்களை வழங்கும். (வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள முதியவர்களுக்கு இலவசமாக மற்றும் பிறருக்கு மானியத் தொகையாக)

3.7 அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் முதியோர்களுக்குக்கான இலவச தடுப்பு ஊசி நெறிமுறைகளை அரசு அறிமுகம் செய்யும்.

## 4. புதிய திட்ட அறிமுகம் - ஒருங்கிணைந்த முதியோர் மேலாண்மை திட்டம் (IGMS)

4.1 அரசு, தற்போதுள்ள அங்கன்வாடி/ சத்துணவு மையங்களைப் பயன்படுத்தி சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகளை வழங்குவதற்காக ஒருங்கிணைந்த முதியோர் மேலாண்மை திட்டம் - IGMS (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் போன்றது) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தும். பல்நோக்கு சுகாதார பணியாளர்கள்/ கிராம சுகாதாரச்

செவிலியர்கள் மூலம் முதியோர்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கு மதிய உணவு மையங்களில் மருந்துகள் மற்றும் சத்தான உணவு (மதியம் உணவு திட்டம், மீல்ஸ் ஆன் வீல்ஸ்) வழங்குதல், வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் மற்றும் பரிந்துரை சேவைகள், விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி அளித்தல் (நிமோகாக்கல் மற்றும் ஃப்ளூ காய்ச்சலுக்கான தடுப்பூசிகள்) போன்ற நடவடிக்கைகள் மூலம் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**5. முதியவர்களுக்கான சிறப்பு நுகர்பொருள் (ரேஷன்)**

5.1 அரசு, பொது விநியோக திட்டத்தின் மூலம் முதியோர்களுக்கான சிறப்பு ஊட்டச்சத்துள்ள நுகர்பொருளின் தொகுப்பை வழங்கும்.

5.2 அரசு, தனித்து வாழும் முதியோர்களுக்கு பொது விநியோக அட்டை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும்.

**6. அனைத்து மூத்த குடிமக்களுக்கும் முதியோர் அட்டை வழங்குதல்**

6.1 அரசு, அனைத்து மூத்த குடிமக்களுக்கும் சமூக உரிமைகள், காப்பீடு மற்றும் மருத்துவச் செலவுகள், பொதுப் போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு இடங்களுக்குள் நுழைதல் போன்ற சேவைகளை பெறுவதற்கு "அனைத்து சேவை முதியோர் அட்டையை" வழங்கும்.

6.2 அரசு, IGMS ஐ அணுகவும், பொது விநியோகக் கடைகளில் உள்ள முதியோர்களுக்கான சிறப்பு பொது விநியோகத் தொகுப்பைப் பெறவும் முதியோர் அட்டையைப் பயன்படுத்த அனுமதிக்கும்.

6.3 அரசு, அனைத்து அரசு மற்றும் தனியார் துறைகளில் முதியோர்களுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் தனிப்பட்ட சேவைகளை வழங்குவதை கட்டாயமாக்கும்.

## II. சமூக பாதுகாப்பு திட்டங்கள்

மூத்த குடிமக்களுக்கிடையே வறுமை அதிகமாக உள்ளது மற்றும் தமிழகத்தில் அதிகரித்து வரும் முதியோர்களுக்கு, ஓய்வூதியம் ஒரு முக்கியமான வாழ்வாதாரமாக உள்ளது.

முதியோர்களின் சமூகப் பொருளாதார நிலை குறித்து ஜெ – பால் (J-Pal) நிறுவனம் நடத்திய நீண்ட கால குழு ஆய்வின் கண்டுபிடிப்புகளின்படி, தமிழ்நாட்டில் 24% மூத்த குடிமக்கள் தீவிர வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர். (ரூ. 38 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு) வறுமைக் கோட்டின் கீழ் வரும் மூத்த குடிமக்களின் சதவீதம் கிராமப்புறங்களை விட (32%) நகர்ப்புறங்களில் (41%) அதிகமாக உள்ளது. ஆண்களை விட பெண்களே வறுமைக் கோட்டுக்குக் கீழே செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. மூத்த குடிமக்களில் 30% மட்டுமே முதியோர் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும், 16% மூத்த குடிமக்கள் மட்டுமே ஓய்வூதியம் பெறுகின்றனர் என்றும் இவ்வாய்வு தெரிவிக்கிறது.

கணிசமான எண்ணிக்கையிலான மூத்த குடிமக்கள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் தனியாக வாழ்கின்றனர். அவர்கள் தனிமையாகவும், மனச்சோர்வுடனும், குறைந்த அறிவாற்றல் செயல்பாட்டுடனும், மற்ற மூத்த குடிமக்களைக் காட்டிலும் அதிக உடல்ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர். தற்போது மூத்த குடிமக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குள், எதிர்கொள்ளும் தேவைகள் மற்றும் சவால்களில் பல வேறுபாடுகள் உள்ளன. எனவே, உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்தது போன்று முதியவர்களை அவர்களின் வயதின் (60-70, 70-80, 80 + வயது ) அடிப்படையில் மேலும் வகைப்படுத்துவது அவசியம் .

தற்போதுள்ள ஓய்வூதியத் திட்டமானது, பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறது, தகுதியான முதியவர்கள் தவிர்க்கப்படுதல், ஓய்வூதியம் பெறுபவர்களுடன் ஒப்பிடும்போது தகுதியான முதியோர்களுக்கு கிடைக்கப்பெறாமல் இருத்தல் தகுதி அளவுகோல் காரணமாக தவிர்க்கப்படுதல், விண்ணப்பிக்கும் முறை குறித்த விழிப்புணர்வு இல்லாமை, விண்ணப்பிக்க உதவி தேவை அல்லது குறைகளைத் தீர்க்கும் வழிமுறை போன்றவையாகும்.

இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முதியோர் ஓய்வூதியம் (OAP) வழங்குதல் செயல்முறையை வலுப்படுத்துவது மற்றும் அதற்கேற்ப சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குவதே கொள்கையின் நோக்கமாகும்.

## 1. முதியோர் ஓய்வூதியத்திற்கான தகுதி அளவுகோல் திருத்தம்

1.1 அரசு, 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தகுதியுடைய அனைத்து மூத்த குடிமக்களின் பொது பாதுகாப்பை உறுதி செய்யும்.

1.2 அரசு, முதியோர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 60-69 வயதுடையவர்களுக்கு மட்டுமே சார்புநிலைக்கான தற்போதைய நிபந்தனைகளை பயன்படுத்தும்.

## 2. விண்ணப்ப செயல்முறையை எளிதாக்குதல்

2.1 அரசு, மொத்த விற்பனை விலைக் குறியீட்டின் (WPI) உணவு குறியீட்டின் அடிப்படையில் எளிய முறையில் ஓய்வூதியத்திற்கு விண்ணப்த்தல், தேர்வு செய்யப்படுதல், ஓய்வூதியம் அதிகரிப்பது போன்ற நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம் சமூகப்பாதுகாப்பு திட்டங்களின் கீழ் அனைத்து தகுதியுள்ள மூத்த குடிமக்களையும் கொண்டு வர முயற்சிக்கும்.

2.2 அரசு, முதியோர்களுக்கு ஓய்வூதியம் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக வலுவான குறை தீர்க்கும் வழிமுறைகளை பின்பற்றும்.

## 3. முதியோர் ஓய்வூதியம் உயர்வு

3.1 அரசு, முதியோர் ஓய்வூதியத்தை, முதியோர்களின் வயது (60-70, 70-80, 80+ வயது) அடிப்படையில் உயர்த்தி, மாறுபட்ட ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்தும். 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கே அதிகமான ஓய்வூதியம் வழங்கப்படும்.

3.2 அரசு, தனிமையில் வாழும் பெண் முதியோருக்கு ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்கும்.

3.3 அரசு, மூத்த குடிமக்கள் சிறப்புப் பிரிவின் கீழ் வரும் அதாவது விதவை, ஆதரவற்ற பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கு ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்கும்.

## 4. பொது விநியோக அமைப்பு

4.1 அரசு, பொது விநியோக முறையின் மூலம் பொருட்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மூத்தகுடிமக்களையும் சென்றடைவதற்கான சிறந்த வழங்கல் சேவையை செயல்படுத்தும்.

## 5. சிறப்பு முகாம்கள்

5.1 அரசு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, சிறப்பு முகாம்களை முதியோர்களுக்கு உகந்த இடங்களில் நடத்திட ஆவண செய்யும். மேலும் இந்த முகாம்கள் பற்றிய முன்னறிவிப்பு பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளிடப்படும்.

## III. வாழ்வாதாரம் / வருவாய் பாதுகாப்பு

அன்றாட வாழ்விற்கு வாழ்வாதாரம் அத்தியவசியமானதாகும். மக்கள் உயிர் தொகை வாழ்வதற்கு, குடும்பங்களைத் தாங்கி ஆதரிக்க வாழ்வாதாரம் தேவையானதாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியானது பலதரப்பட்ட வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது. குடும்ப வாழ்வாதாரப் பாதுகாப்பானது வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ஏழைகள் உயிர்வாழ்வதற்கு மேற்கொள்ளும் பல்வேறு மாற்றங்கள் நிறைந்த உத்திகள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான புரிதலைத் தருகிறது.

அனைவருக்கும் வேலை என்ற இலக்கில், முதியோர் தொடர்ந்து வேலையில் இருப்பதால் இளைஞர்க்கு வேலைவாய்ப்பு சந்தையில் வாய்ப்புகள் குறையாது, மாறாக அவர்களின் பங்களிப்பு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதை அங்கீகரிக்க வேண்டும். ஏனென்றால் முதியோரின் அனுபவங்கள் மற்றும் திறன்களால் இளைஞர் மற்றும் புதிய பணியாளர்கள் பயிற்றுவிக்கப்படுவது இச்சமூகத்திற்கு கூடுதல் நன்மை அளிப்பதாக இருக்கும். மனித வள மேலாண்மை நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் முதியோர்களின் குறிப்பிட்ட தேவைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் மூத்த குடிமக்களின் சார்பு விகிதம் 2001-ல் 13.9% ஆக இருந்து 2011-ல் 15.8% ஆக இருந்து 2021-ல் 20.5% ஆகவும், 2031-ல் 28% ஆகவும் உயரும் என்று புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

(MoSPI) வெளியிட்டுள்ள தகவல் தெரிவிக்கிறது. வயதான ஆண்களை விட வயதான பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எனவே மூத்த குடிமக்களின் வாழ்வாதாரம் மற்றும் வருவாய் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இவ்வரசு, முதியோர்களுக்கான இக்கொள்கையில் கண்ணியத்துடன் மூப்பெய்தலை முக்கியமான பகுதியாக கருதுகிறது. பொருளாதார தன்னிறைவு, வருமானம் ஈட்டுதல், கல்வித் திட்டங்கள் மற்றும் தொழில்சார் நடவடிக்கைகள் உள்ளிட்ட புனர்வாழ்வுத் திட்டங்கள் மூலம் முதியோர் நலன் மற்றும் முதியோர்களுக்கான வாழ்வாதாரத்தை உருவாக்குவது இதன் ஒரு அங்கமாகும்.

## 1. முதியோரின் நிலையான வருமான ஆதாரத்திற்கான வாழ்வாதார நடவடிக்கைகளை உறுதி செய்தல்

1.1 அரசு, முதியோர்கள் அதிக ஈடுபாட்டுடன், தன்னம்பிக்கையுட்ன் உற்பத்திதிறன் மிக்க கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்வாதாரப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தும்.

## 2. வளர்ந்து வரும் நிறுவன தளங்களின் மூலம் பாதிப்பு குறைப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடுகளை உறுதி செய்தல்

2.1 அரசு, வருமான பாதுகாப்பை மேம்படுத்த புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு அல்லது ஏற்கனவே உள்ள நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு நிதியுதவியை அதிகரிக்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் முதியோர் தொழில்களுக்கு, வயது வரம்பில்லாமல், எளிதாக திருப்பிச் செலுத்தும் கால அட்டவணையுடன், சிறுநிதி/நுண்கடன்களை பெறுவதற்கு ஏற்பாடு செய்யும்.

2.2 அரசு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மூத்த குடிமக்களுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்கும்.

2.3 அரசு, முதியோர்களுக்கென அவர்கள் தயாரித்த பொருட்கள் விற்பனை செய்வதற்கு பிரத்தியேகமான சந்தை மையங்களை உண்டாக்கும். இதன் மூலம் அவர்களின் குறைந்தபட்ச வருமான உத்தரவாதத்தை ஏற்படுத்தும்.

3. **முதியோர் சுய உதவி குழுக்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்**

3.1 அரசு, "முதியோர் சுய உதவி குழுக்களை" நகர்புறம் மற்றும் கிராமபுற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் முதிய, ஆண் பெண் இருபாலருக்கும் அமைக்கும்.

3.2 அரசு, சுயஉதவி குழுக்களுக்கு போதுமான நிதி உதவியை வங்கி இணைப்புகள் மூலம் வழங்குவதை உறுதிசெய்யும்.

4. **முதியோரின் வருமான பாதுகாப்பினை செயல்படுத்துதல் .**

4.1 அரசால் வயது வரம்பில்லாமல் திறன்மிக்க மூத்த குடிமக்களுக்கு நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய மறுவேலைவாய்ப்பு அளிக்கும் ஒரு வள மையம் தொடங்கப்படும்.

4.2 அரசு, மனிதவள நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப ரீதியாக பயனாளர்களுக்கு எளிய முறையில் இயக்கக்கூடிய ஆன்லைன் வேலை வாய்ப்பு இணையதளங்களை உருவாக்கும்.

5. **மூத்த குடிமக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தை இணைப்புகளை ஏற்படுத்துதல்**

5.1 அரசு, முதியோர்கள் தங்கள் தயாரிப்புகளை அவர்களின் குறைந்தபட்ச வருமான உத்தரவாதத்திற்காக சந்தைப்படுத்த "ஒரு நிறுத்த மையம்" (One Stop Centre) தொடங்கும்.

5.2 அரசு, மூத்த குடிமக்கள் தங்கள் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு கொண்டு செல்ல இலவச பொது போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும்.

5.3 அரசு, மேளாக்கள் மற்றும் கண்காட்சிகளில் இடம் ஒதுக்குவதில் மூத்த குடிமக்களுக்கு கட்டாய முன்னுரிமை அளிக்கும்.

## IV. வீட்டுவசதி மற்றும் சுற்றுச்சூழல்

வறுமை, அடிப்படைத் தேவைகளை நிராகரித்தல், கைவிடுதல், தன்னிச்சையாக மற்றும் வலுக்கட்டாயமாக சொத்துக்களை அகற்றுதல், நீண்டகால அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுதல், பல்வேறு வகையான உடல், மன மற்றும் நிதி முறைக்கேடு, நாள்பட்ட நோய் மற்றும் இயலாமை ஆகியவை மூத்த குடிமக்கள் மத்தியில் வீடற்ற தன்மையை அதிகரிக்கின்றன.

முறைசாரா குடியேற்றங்களில் உள்ள வீடுகளில் போதிய இடவசதி இல்லாதது மற்றும் தனியுரிமை இல்லாததால், மூத்த குடிமக்கள் தெருவுக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. கண்ணியமான மீட்பு மற்றும் தங்குமிடம் கிடைக்காததால் வீடற்ற சூழ்நிலைகளில் மூத்த குடிமக்கள் இறந்த நிகழ்வுகளும் உள்ளன.

இந்திய அரசின் குடும்ப நல அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2017-2018 ஆம் ஆண்டுக்கான முதுமைப்பற்றிய நெடுந்தொடர் ஆய்வின்படி, (LASI) தமிழ்நாட்டில் 59.9% முதியோர் குடும்பங்கள் மட்டுமே தளம்போடப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர். தற்போது நடைமுறையிலுள்ள பொது வீட்டு திட்டங்கள் மலிவு விலையில் இல்லாததால் சமூக ரீதியாக பின்தங்கிய குழுக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவைச் சேர்ந்த மூத்த குடிமக்களால் வாங்க இயலவில்லை. எனவே, சமூக மறு ஒருங்கிணைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக தொடர்ச்சியாக வீடு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான நோக்கத்தை மட்டுப்படுத்துகிறது. ஆகவே, முதியோர்களுக்கான பொது வீட்டு வசதித் திட்டங்களை மேம்படுத்தி செயல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

மூத்த குடிமக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான வாழ்க்கை முறையை உறுதி செய்வதற்கு தண்ணீர் மற்றும் சுகாதாரத்திற்கான அணுகல் முக்கியமானது. LASI ஆய்வின்படி, தமிழ்நாட்டில் உள்ள முதியோர் குடும்பங்களுக்கு மின்சாரம் மற்றும் சுத்தமான சமையல் எரிபொருளின் சிறந்த அணுகல் உள்ளது, ஆனால் 50.6% முதியோர் குடும்பங்கள் மட்டுமே தங்கள் குடியிருப்பு/சொந்த முற்றத்தில் தண்ணீர் வசதியைக் கொண்டுள்ளன.தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள முதியோர் குடும்பங்களில் 39.7% மற்றும் நகர்ப்புற முதியோர் குடும்பங்களில் 12.8% தொடர்ந்து திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை தொடர்வதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

முதியவர்களில் 70% பேர் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதாக J-PAL கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. மூத்த குடிமக்களின் நடமாட்ட வரம்புகள் மற்றும் அணுக முடியாத பொது போக்குவரத்து வசதிகள் மூத்த குடிமக்களின் பாதிப்புகளை மேலும்

அதிகரிக்கிறது, ஏனெனில் இது அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகுமுறை கட்டுப்படுத்துகிறது.

இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மூத்த குடிமக்களின் குடும்பங்களுக்கு கண்ணியமான, பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய வீடுகள், போக்குவரத்து மற்றும் பிற அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளுக்கான அணுகளைக் இக்கொள்கை அங்கீகரித்து முன்னுரிமை அளிக்கிறது.

## 1. வீட்டுவசதி, அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது இடங்களுக்கான அணுகுகளை உறுகதி செய்தல்

1.1 அரசு, நகர்ப்புற வீடற்றோர்களுக்கான தங்குமிடம் திட்டத்தின் கீழ் வீடற்ற சூழ்நிலையில் உள்ள மூத்த குடிமக்களுக்கு கண்ணியமான மீட்பு சேவைகளை அணுகுவதற்கு இடைக்கால தங்குமிடங்களை அமைக்கும் (குறிப்பாக மாநகராட்சி /நகராட்சிகள்/ யாத்திரை நகரங்கள்).

1.2 அரசு, தற்போதுள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுத் திட்டங்களில் மூத்த குடிமக்களுக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தும். இதன் மூலம் வீடற்ற சூழ்நிலைகளில் அல்லது நிறுவனப் பராமரிப்பு தேவைப்படும் எவரையும் சார்ந்திராத மூத்த குடிமக்களுக்கு சமூதாயத்தில் மறுஒருங்கிணைப்பு செய்யும் விதமாக அவர்களுக்கு வசதி செய்து தரப்படும்.

1.3 அரசு, வெளியேற்றப்பட்ட, மீள்குடியேற்றபட்ட மூத்த குடிமக்களுக்கு அதன் பாதிப்பைத தணிக்க 12 மாதங்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவி தொகை அதிகரிக்கப்படும்.

1.4 அரசு, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மண்டல திட்டங்கள் மற்றும் முக்கிய திட்டங்களில் மூத்த குடிமக்களுக்கான சேவைகளை ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யும். அனைத்து பொது வீடுகள் மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டங்களில் மூத்த குடிமக்களுக்கான வசதிகளை அமைப்பதற்கு இடங்களை ஒதுக்குமாறு பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ULBs) அரசு அறிவுறுத்தும். இக்கட்டான சூழ்நிலையில் உள்ள மூத்த குடிமக்களின் உடனடித் தேவைகளைப்

பூர்த்திச் செய்ய அடிப்படைத் தேவைகளுக்கான வங்கியை அமைக்க இந்த இடம் பயன்படுத்தப்படும்.

1.5 அரசால் இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளிலும் மூத்த குடிமக்களுக்கு இருக்கையில் முன்னுரிமை, வரிசையில் முன்னுரிமை மற்றும் இலவச பேருந்து பயணம் ஆகியவற்றை அரசு ஒதுக்கீடு செய்யும். பொது போக்குவரத்து சேவைகளை மூத்த குடிமக்கள் மற்றும் இயலாத நபர்கள் எளிதில் அணுகக்கூடிய சூழலை அரசு ஏற்பாடு செய்யும்.

1.6 அரசு, அனைத்து பொது இடங்களிலும் மூத்த குடிமக்களுக்கு தனி அணுகலை வழங்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கும்.

1.7 அரசு, மூத்த குடிமக்கள் அணுகும் அனைத்து அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது இடங்கள் முதியோர்களுக்கு ஏற்ற வடிவமைப்புகளை பின்பற்றுவதை கட்டாயமாக்கும்.

## 2. வீடற்ற சூழ்நிலையில் உள்ள மூத்த குடிமக்களுக்கு இடைக்கால தங்குமிடங்களை நிறுவுதல்

2.1 அரசு, தனியார் துறைகளுடன் இணைந்து அனைத்து நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலும் வீடற்ற சூழ்நிலைகளில் மூத்த குடிமக்களுக்கான இடைக்கால தங்குமிடங்களை அமைக்க உதவும்.

2.2 அரசு, பல பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், கண்ணியமான மீட்பு செயல்முறையை உறுதிப்படுத்தவும், கவனிப்பாளர்கள் / உதவியாளர்களின் தேவையில்லாமல் மருத்துவமனையில் சேர்ப்பது, மீட்புக்குப் பின் பின்தொடர்தல் மற்றும் குறுகிய கால மறுவாழ்வு வசதிகளை மேற்கொள்ளவும், இக்கட்டான சூழ்நிலைகளில் முதியோர்களுக்கான இடைக்கால தங்குமிடங்களை செயல்படுத்துவதற்கு, மற்றும் நீண்ட கால பராமரிப்பு வழங்கும் நிறுவனங்களின் பரிந்துரைக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை உருவாக்கும்.

## V. இடரின்மை மற்றும் பாதுகாப்பு

முதியோர் மீதான துன்புறுத்தல் அதிகரித்து வருவது, முதியோரின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மூத்த குடிமக்களுக்கு எதிரான புறக்கணிப்பு, துன்புறுத்தல், மற்றும் பிற வன்முறைகள் பல

வடிவங்களில் உள்ளன – உடல், உளவியல், உணர்வு, நிதி மீதான வன்முறைகள் அனைத்து சமூக, பொருளாதார, இனம் மற்றும் வாழும் இடங்களில் ஒவ்வொரு சமூகத்திலும் நிகழ்கிறது.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) 2020 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, மூத்த குடிமக்கள் கொலை செய்யப்படுவதில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், கொள்ளை அடிக்கப்படுவதில் முதலிடத்திலும் உள்ளது. மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள போலீஸ் விசாரணை வழக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், நிலுவையில் உள்ள வழக்குகளில் நாட்டிலேயே நான்காவது இடத்திலும் உள்ளது.

துன்புறுத்தல் நடந்த பின் நடவடிக்கை எடுப்பதை விட முதியோர் துன்புறுத்தலை தடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. முறைகேடுகளை ஆரம்ப நிலையிலேயே முதலில் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். துன்புறுத்தல், நுகர்வோர் மோசடி மற்றும் வயதானவர்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வீட்டில் மற்றும் சமூகம் மற்றும் நிறுவன அமைப்புகளில் உள்ள முறையான மற்றும் முறைசாரா பராமரிப்பாளர்களால் புறக்கனிப்பு, துன்புறுத்தல் மற்றும் வன்முறை, ஏற்படக்கூடிய அபாயத்தை வல்லுநர்கள் அடையாளம் காண வேண்டும். பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007, பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான தேவை அடிப்படையிலான பராமரிப்பை உறுதிசெய்து, முதியவர்களை துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் தடுத்து அவர்களின் நலனை உறுதி செய்கிறது.

முதியோருக்கான பல்வேறு வகையான இடரின்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவரங்கள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது. இதில் தனிநபர் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்றவை அடங்கும். சுகாதாரம், காவல்துறை போன்ற சேவைகளை அணுகுவது முதியவர்கள் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனை ஆகும். மூத்த குடிமக்கள் பராமரிப்புச் சட்டத்தின் விதிகள், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு விதிகள் மற்றும் துன்புறுத்தலில்

இருந்து பாதுகாப்பு குறித்து முதியோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இக்கொள்கையானது மூத்த குடிமக்களின் பாதுகாப்புக்கான செயற்திறனுள்ள வழிமுறைகளை மேற்கொள்ளவதை உறுதி செய்யும்.

## 1. முதியோர் வன்கொடுமைக்கான தண்டனைகளை அமல்படுத்துதல்

1.1 அரசு, முதியோர் வன்கொடுமைகளான- உடல், உணர்ச்சி, புறக்கணிப்பு மற்றும் கைவிடுதல், பாலியல் மற்றும் நிதி மோசடி போன்றவற்றுக்கு கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தும்.

## 2. துன்புறுத்தலால்பாதிக்கப்பட்டவர்களுக்கு மீட்பு/மறுவாழ்வு மையம் நிறுவுதல்

2.1 அரசு, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மையங்களை நிறுவி, பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கும், சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கும் காவல்துறை, மருத்துவப் பணியாளர்கள், சமூகப் பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் அடங்கிய பணிக்குழுவை நியமிக்கும்.

2.2 அரசு, நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வீடற்ற முதியோர்களுக்கான மீட்பு/புணர்வாழ்வு மையங்கள் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வங்கியாகவும் செயல்படும்.

## 3. காவல்துறை

3.1 அரசு, காவல்துறை தலைமை இயக்குனரின் கீழ், மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் குற்றவியல் துறை என்ற தனிப்பிரிவை அமைக்கும்.

3.2 அரசு, மூத்த குடிமக்களின் உணர்வுகளை விழிப்புட கவனிக்கவும், தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் திட்டங்களை வைத்திருக்கவும் காவல்துறைக்கு அறிவுறுத்தும். இதுமூத்த குடிமக்கள் தனியாகவோ அல்லது தம்பதிகளாகவோ வசிப்பவர்களின் பாதுகாப்பிற்கான விரிவான திட்டத்தை உள்ளடக்கியது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள சிறப்புத் திட்டங்களில் மூத்த குடிமக்கள்

மற்றும் அக்கம்பக்க சங்கங்களுடன் தொடர்புகொள்வதற்கான வழிமுறைகளையும் காவல்துறை ஊக்குவிப்பார்கள்.

3.3 அரசு, மூத்த குடிமக்களுக்கான உதவி எண்கள் சட்ட உதவி மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்ற பாதுகாப்பு சேவைகளை ஏற்படுத்தும்.

## 4. சட்ட ஏற்பாடு

4.1 அரசு, முதியோர்கள்எளிதாகவும் உதவ கோரி அணுகுவதற்கும், முன்னுரிமை வழங்குவதற்கு என தனியாக "மூத்த குடிமக்கள் குறைதீர்க்கும் நாள்" நடைமுறைப்படுத்தப்படும்.

4.2 அரசு, பராமரிப்புச் சட்டத் தீர்ப்பாயம்/ மாநில சட்ட உதவி மையம்/ குடும்ப நீதிமன்றங்கள்/ நடமாடும் நீதிமன்றங்கள் ஆகியவைற்றிலுள்ள மூத்த குடிமக்களுக்கு சார்பு / எதிரான வழக்குகளைக் கையாள்வதற்கென வழிமுறைகளை ஏற்படுத்தும்.

4.3 அரசு, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நல சட்டம், 2007 ஐ அரசு கடுமையாக செயல்படுத்தும். இதனால் தங்களைப் பராமரித்துக் கொள்ள இயலாத வயதான பெற்றோர்கள் கைவிடப்படாமலும், புறக்கணிக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்யும்.

4.4 அரசு, தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நல விதிகள், 2009ன் கீழ் அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்களின் (மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உட்பட) செயல்பாட்டைக் கண்காணிக்க "மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான குழு" திறம்பட செயல்படுவதை உறுதி செய்யும்.

4.5 அரசு, உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் மூத்த குடிமக்கள் முன்னுரிமை பெற்று காவல்துறை, வருவாய், சுகாதாரம், மாவட்ட சமூக நல அலுவலர்கள்/பராமரிப்பு அலுவலர்கள்/ சமரச அலுவலர்கள், ஆகியோருடன் குறிப்பாக சட்ட உதவிகள் தேவைப்பட்டால் அவர்களை எளிதில் தொடர்பு கொள்வதை உறுதி செய்வதற்கென தகவல்களுடன் கூடிய தகவல் நிலையங்களை அமைக்கும்.

## 5. அடிப்படை மதிப்பீடு

5.1 அரசு, முதியோருக்குக்கான இலக்கு சார்ந்த சேவைகளை வழங்குவதற்கு, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் முதியோருக்கான பாதிப்பை மதிப்பீடு செய்யும். வயது அடிப்படையில் மூத்த குடிமக்கள் அரசால் வகைப்படுத்துவர் (60-70 வயது இளம் முதியோர், 70-80 வயது நடுத்தர முதியோர், 85+ வயது மூத்த முதியோர்), உடல் திறன்/இயலாமை, மன திறன்/இயலாமை, பாலினம், பொருளாதாரம், வறுமைக்கோடு, புவிசார் இருப்பிடம்).

## VI. நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு

கூட்டுக் குடும்பச் சிதைவு, புதிய தொழில்நுட்பங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, இடம்பெயர்வு, உலகமயமாக்கல் மற்றும் நவீன வாழ்க்கை முறை போன்ற பல்வேறு காரணங்களால், முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு, அவர்களது சொந்த நலனுக்கும், அவர்களது குடும்பத்துக்கும், சமூகத்துக்கும், அரசாங்கத்துக்கும் பல பிரச்னைகளையும், சவால்களையும் உருவாக்குகிறது. சமூக மாற்றம் மற்றும் வளர்ந்து வரும் வாழ்க்கை முறையின் விளைவுகளால், முதியவர்களில் பலர் முதியோர் இல்லங்களில் இருக்கின்றனர். குறிப்பாக நகர்ப்புறங்களில் அதிகமாக வளர்ந்து வரும் தனி குடும்பங்கள் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்க வழிவகுத்து வருகிறது. நிறுவனங்கள் மூலம் பராமரிப்பானது அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதையும், அவர்களின் நல்வாழ்விற்கும் உகந்த சூழல் உருவாகுவதை உறுதி செய்யும்.

பொழுதுபோக்கு மையங்கள் முதியோர்களின் நலனுக்காக பல உடல் மற்றும் மன செயல்பாடுகளை வழங்குவதன் மூலம் முதியவர்களின் வாழ்க்கையை பல வழிகளில் வளப்படுத்துகின்றன. முதியோருக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் முதியோருக்கு மட்டுமல்லாது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக அக்குடும்பத்தில் அவர்களை பராமரிப்பவர்களுக்கும் வெற்றி/வெற்றி என்ற சூழ்நிலையை வழங்குகிறது. முதியோருக்கான பகல்நேர பராமரிப்பு ஒரு நாளின் பெரும் பகுதியைக் கழிக்க பாதுகாப்பான சூழலை தருகிறது.அர்த்தமுள்ள சமூக தொடர்பு மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் ஆகிய இரண்டையும்

மேம்படுத்துகிறது மற்றும் முதியோரின் அறிவாற்றல் வீழ்ச்சியைத் தடுக்க அல்லது தாமதப்படுத்தவும் உதவுகிறது.

இக்கொள்கையின் கட்டமைப்பானது, நிறுவனப் பராமரிப்பின் தரமான செயல்பாட்டில் கவனம் செலுத்துகிறது. வீட்டை விட்டு வெளியே உள்ள சூழலிலும் வீட்டிலுள்ள அனுபவத்தையே அளிக்கக்கூடிய தரமான நிறுவன பராமரிப்பு அளிப்பதில் இக்கொள்கை கவனம் செலுத்தும்.

1. **கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் முதியோர் இல்லங்களை நிறுவுதல் (இலவச மற்றும் கட்டண இல்லங்கள் )**

1.1 அரசு மற்றும் தனியார் மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களை நிறுவுதல்/நிர்வகிப்பதற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் அரசால் உருவாக்கப்படும்.

1.2 அரசு, மாநிலம் முழுவதிலும் உள்ள முதியோர் இல்லங்கள் பதிவு செய்யப்படுவதை வலியுறுத்தும். மூத்த குடிமக்களுக்கான சிறந்த சேவைகளை வழங்குமைக்காக "தகுதி வாய்ந்த நிறுவனம்" என்ற தகுதி சான்றிதழை அத்தகைய நிறுவனங்களுக்கு வழங்கலாம்.

1.3 அரசு, அனைத்து முதியோர் இல்லங்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு மையங்கள் சீரான வழிமுறைகளை பின்பற்ற நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOP) உருவாக்கி செயல்படுத்துவதை உறுதி செய்யும்.

2. அரசு, கிராமம்/ வட்டம்/ மாவட்ட அளவில் மனநல மையங்கள், முதியோர் வள மையங்கள்/ கிளப்கள், முதியோர் பகல்நேர பராமரிப்பு மையங்கள், முதியோர் ஆலோசனை மையங்கள் மற்றும் முதியோர் பொழுதுபோக்கு மையங்களை வழக்கத்திற்கு கொண்டுவர முயற்சி செய்யும்.

3. அரசு, காணாமல் போன முதியவர்களைக் கண்காணிப்பதற்கு தனி இணையதளத்தை அமைக்கும் (உதவி எண்)

4. அரசு, ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர் நலக் குழுவை அமைக்கும். இதன் மூலம் முதியோர் இல்லங்களில் சேர்க்கை நிர்வகிக்கப்பட்டு கண்காணிக்கப்படும்.

5. அரசு, முதியவர்களை அடக்கம் செய்வதற்கான, தேவையற்ற காலதாமதங்களைத் தடுக்க அடக்க வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கும்.

## VII. விழிப்புணர்வு மற்றும் கல்வி

விழிப்புணர்வும் கல்வியும் தான் கண்ணியமான வாழ்க்கைக்கு அடித்தளம். ஒரு அறிவுசார்ந்த சமூகத்திற்கு கல்வி மற்றும் பயிற்சிக்கான வாழ்நாள் முழுவதுமான அணுகளை உறுதி செய்ய கொள்கைகள் நிறுவப்பட வேண்டும். தனிநபர்கள் மற்றும் நாடுகளின் உற்பத்தித்திறனை உறுதிப்படுத்த தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி அவசியம். மூத்த குடிமக்களுடன் பணிபுரியும் அனைத்து சுகாதார வல்லுநர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான முதியோர் மருத்துவம் மற்றும் முதுமை மருத்துவத் துறையில் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான அவசரத் தேவை உலகம் முழுவதும் உள்ளது. பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு மூத்த குடிமக்களின் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் அடிப்படை பயிற்சிகளை வழங்குவதும் அவசியம்.

கவனம் செலுத்த வேண்டிய மற்றொரு அம்சமானது, தலைமுறைகளுக்கு இடையேயான பிணைப்பு ஆகும். இது மனித நன்னெறிகளை வளர்க்கும் ஆரோக்கியமான சமூகத்திற்கு பங்களிக்கும். இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். வயது முதிர்ந்தவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், மூத்த குடிமக்களுக்கு எதிரான முதுமை பற்றிய தவறான எண்ணங்களை நீக்குவதற்கும், அவர்களுக்கு ஆறுதல் மற்றும் மனநிறைவு உணர்வைக் கொடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது பரஸ்பர புரிதலையும் தலைமுறையினரிடையே மரியாதையையும் ஊக்குவிக்கிறது.

மூத்த குடிமக்கள் உயரிய அனுபவம், திறன்கள், அறிவு, திறமைகள், ஞானம், தார்மீக மதிப்புகள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர் என்பதால் அவர்கள் மதிப்புமிக்க பொக்கிஷங்களாக கருதப்பட்டு கொண்டாடப்பட வேண்டும். எனவே மூத்த குடிமக்களுக்கான சர்வதேச தினங்கள் முதியவர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கவும் பாராட்டவும் மற்றும் மூத்த குடிமக்களின் முக்கியத்துவம் மற்றும் தற்போதைய உலகில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வை பரப்பவும் அனுசரிக்கப்பட வேண்டும்.

மின்னனு (டிஜிட்டல்) தொழில்நுட்ப பற்றிய அறிவு இல்லாதது முதியோரின் முக்கிய சவால்களில் ஒன்றாகும். மூத்த குடிமக்களுக்கான இணைய கல்வி அளிப்பது உண்மையிலேயே காலத்தின் தேவை. முதியோரின் பொருளாதார வளர்ச்சி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சொத்தாக அமையும் என்பதால் மூத்த குடிமக்களுக்கு இணைய திறன் தேவை. அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டங்களின் கவனம் நாட்டின் இளைஞர்கள் மீது உள்ளது. இத்தகைய கவனத்தை முதியோர் மீதும் செலுத்த வேண்டும். இதனால் இந்த சமூகம் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துடன் தங்களைச் ஈடுபடுத்தி, தேசத்தின் உண்மையான மின்னனு (டிஜிட்டல்) முன்னேற்றத்திற்கு பங்களிக்க முடியும்.

இக்கொள்கை கட்டமைப்பபானது பின்வரும் உத்திகளை செயல்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வு மற்றும் கல்வி மூலம் முதியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை உறுதி செய்யும்:

**1. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் புதிய பாடத்திட்டத்தை உருவாக்குதல்**

1.1 அரசு, முதியோர் அலட்சியம்/ முதியோர் அவமரியாதையை தடுக்க ஆரம்ப நிலையிலேயே தலைமுறைகளுக்கு இடையே பிணைப்பை வளர்க்கும் சமூக நெறிகளைக் குறித்த பாடத்திட்டத்தை சேர்க்க வலியுறுத்தும்.

1.2 அரசு, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் முதியோர் பராமரிப்பு மற்றும் அவர்களின் நல்வாழ்வுக்கு பங்களிக்கும் வழிகளை குறித்த பாடத் தாளைச் சேர்ப்பதை கட்டாயமாக்கும்.

1.3 அரசு, மூத்த குடிமக்களின் உடல், சமூக, பொருளாதார, உளவியல் மற்றும் சட்டப்பூர்வ அம்சங்களைப் பற்றிய, முதியோர் பராமரிப்பு துறையில் கட்டாய ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தும்.

**2. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) பொருட்களை உருவாக்குதல்**

2.1 அரசு, தகவல், கல்வி மற்றும் தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான உபகரணங்களை உருவாக்கும்.

2.2 அரசு,முதியோர் பராமரிப்பு துறையின் நிபுணர்களுடன் இணைந்து, ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ பணியாளர்கள், பராமரிப்பாளர்கள், ஆரம்ப சுகாதார நிலையம்(PHC) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்(UPHC) சுகாதாரப் பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள்(SHG), மூத்த குடிமக்கள் சங்கங்கள், தேசிய சாரணர் பணி(NSS)/ தேசிய மாணவர் படை(NCC)/ இளம் செஞ்சிலுவைச் சங்கம்(YRC) தன்னார்வலர்கள் ஆகியோருக்கான முதியோர் பராமரிப்பு குறித்த பயிற்சி, கருத்தரங்குகள், பட்டறைகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யும்.

## 3. தலைமுறைகளுக்கு இடையிலான பிணைப்பு (IGB)

3.1 அரசு, முதியோரின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளின் நீட்டிப்பு சேவைகளுக்காக கிராமப்புற/ நகர்ப்புற/ பழங்குடியினர்/ கடலோர மட்டங்களில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தை தத்தெடுப்பதைக் கட்டாயமாக்கும்.

3.2 அரசு, கல்வி நிறுவனங்கள், பெரு வணிக (கார்ப்பரேட்) நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் IGB திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும்.

## 4. முதியோர் தொடர்பான சர்வதேச தினங்களைக் கடைப்பிடித்தல்

4.1 அரசு, மாநிலம் முழுவதும் (அரசு மற்றும் தனியார் அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்) உலகளவில் பின்பற்றப்படும் ஐ.நா.வின் கருப்பொருளின்படி ஒரு கருப்பொருளை உருவாக்கி முதியோர்களின் அனைத்து முக்கியமான நாட்களையும் அனுசரிக்கும். அவர்களின் பாதுகாப்பு, உரிமைகள், பராமரிப்பு மற்றும் முதியோர் துன்புறுத்தலை தடுப்பதை உறுதி செய்யும்.

- ஜூன்15 - உலக முதியோர் வன்கொடுமை எதிர்ப்பு விழிப்புணர்வு தினம்
- செப்டம்பர் 21 - உலக அல்சைமர் தினம்
- அக்டோபர் 1 - சர்வதேச முதியோர் தினம்

4.2 அரசு, முதியோர்களின் வாழ்க்கையை அங்கீகரித்து அவர்களை கௌரவிப்பதற்காக பல வகை விருதுகளை அளிக்கும்.

4.3 அரசு, முதியோர் நிறுவனங்களை நடத்தும் தனிப்பட்ட நபர் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புகள் மற்றும் சேவைகளை அங்கீகரித்து பாராட்டுவதற்காக சிறப்பு விருதுகளை அளிக்கும்.

4.4 அரசு, தலைமுறைகளுக்கு இடையேயான உறவுகளை உருவாக்குவதற்கு "தாத்தா பாட்டி தினத்தை" கடைபிடிக்குமாறு கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தும்.

5. **மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் விழிப்புணர்வு மற்றும் கல்வி அளித்தல் - அச்சு ஊடகம்/ ஒளிபரப்பு ஊடகம்/ மின்னனு ஊடகம் (டிஜிட்டல்) / சமூக ஊடகம் (தொலைகாட்சி /வானொலி ஒளிபரப்பு, துண்டுபிரச்சுங்கள், மின்னனு காட்சிகள் மற்றும் பூங்காக்கள், பேரங்காடிகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள்.)**

5.1 அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் முதியோர்களுக்கு அவசரகால சேவைகளை உடனடியாக அணுகுவதற்கு உள்ளமைக்கப்பட்ட விரைவு அழைப்புடன் (Speed Dial) கூடிய முதியோர் நட்பு தொலைபேசிகளை விநியோகம் செய்யும் - தேசிய கட்டணமில்லா உதவிஎண் சேவை 14567, அவசர உதவி ஊர்தி (ஆம்புலன்ஸ்) / மருத்துவ அவசரநிலை, முதியோர் முறைக்கேடு, நடமாடும் உணவகம் ( மீல்ஸ் ஆன் வீல்ஸ்) மற்றும் பேரிடர்.

5.2 அரசு, பொது மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து, கிராமப்புற/ பழங்குடியினர்/ நகர்ப்புறங்களில் பிரச்சாரங்களை நடத்தி, முதியோர்களுக்கும், முதியோர்களுக்காக அரசு வழங்கும் தற்போதைய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

5.3 அரசு, முதியோர்களின் தேவைகளை திறம்பட செயல்படுத்துவதற்காக கிராமப்புற/ பழங்குடியின / நகர்ப்புறங்களில் முதியோர்களுக்கு உகந்த இ-சேவை மையங்களை அமைக்கும்.

6. **தகவலுக்கான அணுகுமுறையை உறுதி செய்தல்**

6.1 அரசு, மூத்த குடிமக்கள் சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான தகவல்களை பெறுவதை உறுதி செய்வதற்காக மூத்த குடிமக்கள் அடிக்கடி செல்லும் முக்கிய இடங்களில் அவர்களுக்கான தகவல் மையங்களை அமைக்கும். மூத்த குடிமக்களுக்குக் கிடைக்கும்

சேவைகள் பற்றிய அனைத்து தகவல்களும் ஒருசேர பதிவு செய்யப்பட்டு இத்தகவல் மையங்களில் எளிதில் கிடைக்கச் செய்ய பெறும்.

6.2 பார்வை குறைபாடு உள்ள நபர்களுக்கும் தகவல்கள் கிடைக்கும் (பிரெயில், சைகை மொழி).

7. **முதியோர் கல்வி**

7.1 அரசு, சுறுசுறுப்பான முதுமையை ஊக்குவிப்பதற்காக திறன் மேம்பாட்டு கல்விக்கான "மூன்றாம் வயது பல்கலைக்கழகம்" (University of third age - U3A) போன்ற ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவும்.

7.2 அரசு, திறந்தவெளி பல்கலைகழகங்களின் பலவகை படிப்புகளுக்கான சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி செய்யும்.

8. **ஊடகத்துறையில் மூத்த குடிமக்கள்**

8.1 அரசு, அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் மூத்த குடிமக்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான செய்திகளை வெளியிடும் போது, உதவி எண்கள் பற்றிய தொடர்புடைய தகவல்களைக் காட்டவும், மூத்த குடிமக்களை சித்தரிக்கும் போது உணர்ச்சிகரமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டும் வழிகாட்டுதல்களை உருவாக்கி, அனைத்து ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பும்.

9. **பரப்புரை (Advocacy)**

அரசு, முதியோர் முறைக்கேடு மற்றும் முதியோர் உரிமைகளை உறுதிசெய்ய பரப்புரைகளை மேற்கொள்ளும்.

## VII. ஆராய்ச்சி மற்றும் ஆவணப்படுத்துதல்

முதுமை பற்றிய பன்முக மற்றும் விரிவான ஆராய்ச்சியை எல்லா நாடுகளிலும், குறிப்பாக வளரும் நாடுகளில் ஊக்குவிப்பது இன்றைய தேவையாக

உள்ளது. முதுமை, வயது மற்றும் பாலின- உணர்திறன் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு உள்ளிட்ட ஆராய்ச்சி, பயனுள்ள கொள்கைகளுக்கு அத்தியாவசிய ஆதாரங்களை வழங்குகிறது. வளர்ந்து வரும் சிக்கல்களைக் கண்டறிவதற்கும் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நம்பகமான தகவல்களின் இருப்பு இன்றியமையாதது.

1.1 அரசு, நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள மூத்த குடிமக்களின் சமூக-பொருளாதார பாதிப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் நிதியளிப்பதற்கும் ஆராய்ச்சி மையங்களை அமைக்கும்.

1.2 அரசு, மறதி நோய் (டிமென்ஷியா, அல்சைமர்) மற்றும் நடுக்கவாத (பார்கின்சன்) நோய் போன்ற முதியவர்களிடம் அதிகம் காணப்படும் நோய்கள் குறித்த ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொள்ள அதிக நிதியை ஒதுக்கும்.

1.3 அரசு, முதியோர் மற்றும் முதுமை தொடர்பான பாலின ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான பெரிய ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மாநிலம் முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ளும்.

1.4 அரசு, காலப் போக்கில் மாறுபடும் முறைகளைத் தீர்மானிக்கவும் வளர்ச்சிப் போக்குகள் குறித்த எதிர்கால ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் நெடுந்தொடர் ஆய்வுகள் மற்றும் குறுக்கு வெட்டு ஆய்வுகளை அரசு மேற்கொள்ளும்.

1.5 அரசு, உள் மற்றும் வெளிநாட்டில் முதியோர் மருத்துவம் குறித்த படிப்புகளை மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி உதவித் தொகைகளை வழங்கும்.

1.6 அரசு, முதியோர் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது மட்டுமின்றி, தொழில்நுட்பத்தின் மூலம் முதியவர்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்கு உதவும் சாதனங்களைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்ப ஆய்வுகளையும் மேற்கொள்ளும் ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவும்.

## IX. பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்பு

பேரழிவு என்பது ஒரு சமூகத்தின் செயல்பாட்டில் ஏற்படும் தீவிரமான இடையூறு ஆகும். இது ஒரு சமூகத்தின் ஆற்றலைத் தாண்டி, மனித, பொருள், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் இழப்புகளை

ஏற்படுத்துகிறது. பேரிடர் மேலாண்மை என்பது பேரிடர்களின் தாக்கத்தை குறைத்து உயிர் மற்றும் உடைமை இழப்பைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தொழில்நுட்பமானது முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அறிகுறிகளை மிகவும் துல்லியமாக்கியுள்ளதால், உயிர் இழப்பைக் தவிர்க்க நிச்சயமாக உதவுகிறது.

முதியோர் தங்களது வயது மூப்பு, எதிர்மறையான மனநலம், நடக்க இயலாமை மற்றும் பார்வை குறைபாடு ஆகியவைககளால் பேரிடரின்போது அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இத்தகைய நிலையில் தணிக்கை உத்திகள், பயனுள்ள மேலாண்மை மற்றும் மறுவாழ்வு அமைத்தல், பேரழிவின் எதிர்மறையான விளைவுகளைத் தடுத்து இயல்பு வாழ்க்கைக்குத் விரைவில் திரும்ப உதவுகின்றன.

1. **துயர் தணிப்பு நடவடிக்கைகள்**

1.1 அரசு, திறம்பட துயர் தணித்தல், மேலாண்மை மற்றும் மறுவாழ்வுக்காக மூத்த குடிமக்களுக்கான பேரிடர் மேலாண்மை கையேட்டை வெளியிடும். மேலும் உடனிணைந்து செயல்படுவோர் மூலம் முதியோர்களுக்கு கையேடு விநியோகிக்கப்படும்.

1.2 அரசு, பேரிடர்களின் போது விரைவான நடவடிக்கைக்காக சமூகம் சார்ந்த அமைப்புகள் (CBO), சுகாதாரத் துறை, பஞ்சாயத்து போன்றவற்றுடன் இணைந்து முதியோருக்கான சிறப்புப் பணிக்குழுவை உருவாக்கும்.

1.3 அரசு, படமிடல் (Mapping) மூலம் பாதிக்கப்படக்கூடிய மண்டலங்களை கண்டறிந்து, பாதிப்பு மண்டலத்தில் வசிக்கும் முதியோர்கள், குறிப்பாக நோய்வாய்ப்பட்டவர்கள், தனியாக வசிப்பவர்கள், படுத்த படுக்கையாக இருப்பவர்கள், தீராத நோயியால் பாதிக்கப்பட்டு படுக்கைகிடையான முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின்கணக்கெடுப்பை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கும்.

1.4 அரசு, முதியோர்கள் அவர்களின் முக்கிய ஆவணங்கள், மருத்துவ அறிக்கைகள், மருந்துகள் மற்றும் சாதனங்கள், உடைகள், விசில் போன்றவற்றைத் தயாராக வைத்துக்கொள்ள பேரிடர்கால "முதியோர் தயார் நிலை பெட்டகம்" வழங்கும்.

1.5 அரசு, மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் பிற தொடர்புடைய சேவைகளை வழங்குவதற்காக கட்டப்படும் அனைத்து புதிய

கட்டமைப்புகளுக்கும், காலநிலையை எதிர்கொள்ளும் கட்டிடத் திட்டங்களைப் பின்பற்றுவதை கட்டாயமாக்கும்.

1.6 அரசு, மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் வழங்கும் கட்டமைப்புகளை உருவாக்க, தாழ்வான, பொருத்தமற்ற சுற்றுச்சூழல் மற்றும் அபாயகரமான இடங்களுக்கு அனுமதி வழங்காமல் இருப்பதை உறுதி செய்யும்.

1.7 அரசு, முதியோர்களுக்கு தங்குமிடத்தை வழங்கும் அனைத்து கட்டிடங்களுக்கும் குறிப்பாக வெள்ளம், நிலச்சரிவு மற்றும் பிற இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்படும் பகுதிகளில், மூத்த குடிமக்களைப் பாதுகாப்பதற்காக, பேரிடர் மேலாண்மை மற்றும் இடர் குறைப்புத் திட்டங்களை உருவாக்குவதை கட்டாயமாக்கும்.

## 2. மேலாண்மை/ நிவாரண நடவடிக்கைகள்

2.1 அரசு, நிதியுதவி உள்ளிட்ட பேரிடர் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் போது முதியோர்களுக்கு அதிக முன்னுரிமை அளிப்பதை உறுதி செய்யும்.

## 3. மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

3.1 அரசு, பேரிடருக்குப் பிந்தைய காலகட்டத்தில் முதியோர்களுக்கு உணவு, தங்குமிடம், உடல் நலச் சேவைகள் மற்றும் மருத்துவச் சேவைகளை வழங்குவதை உறுதி செய்யும்.

3.2 அரசு, பேரழிவின் கொடூரத்தால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு ஆலோசனை அமர்வுகள், மனநல சேவைகள் மற்றும் ஆதரவை வழங்க ஏற்பாடு செய்யும்.

3.3 அரசு, முதியோர்களின் வாழ்க்கையை குறுகிய காலத்திற்குள் மீட்டமைத்து, மறுகட்டமைப்பதில் ஏற்படும் தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளும்.

# X. கொள்கை செயல்பாட்டிற்கான கட்டமைப்புகளை நிறுவுதல்

## 1. மூத்த குடிமக்கள் நலனுக்கான இயக்குநரகம்

1.1 அரசு, மாநில அரசால் மூத்த குடிமக்கள் நலனுக்கான தனி இயக்குநரகம் அமைக்கப்படும். மூத்த குடிமக்கள் மீதான மாநிலக்

கொள்கையை அமல்படுத்துவதும், கண்காணிப்பதும் தமிழ்நாடு மூத்த குடிமக்கள் நல இயக்குநரகத்தின் கீழ் நடைபெறும்.

1.2 அரசு, தற்போதுள்ள "மூத்த குடிமக்களுக்கான மாநில அளவிலான குழு இக்கொள்கையின் அமலாக்கத்தைக் கண்காணித்து மூத்த குடிமக்களின் பிரச்சனைகளைக் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

## இணைப்பு

### 1. தமிழ்நாட்டிலுள்ள மூத்த குடிமக்கள் தொகையின் இதர புள்ளியியல் ( 60 வயதிற்கு மேற்பட்டோர்)

| வகை | மொத்தம் | ஆண் | பெண் | ஊரகம் | நகரம் |
|---|---|---|---|---|---|
| படித்தவர்கள் (%) | 50.3 | 71.5 | 50 | 47.1 | 70.2 |
| விதவையர்(%) | 41.2 | 8.9 | 35.3 | 26.8 | 22.8 |
| பணிபுரிபவர்கள் (%) | 39.2 | 71.7 | 41.5 | 60.6 | 46.2 |
| ஓய்வூதியம் பெறுபவர்கள் (%) | 11 | 8 | 4.4 | 3.5 | 9.7 |
| வருங்கால வைப்பு நிதி பெறுபவர்கள் (%) | 6.4 | 7 | 5 | 5 | 7.4 |
| பணி ஓய்வின் மூலம் ஓய்வுதியம் பெறுபவர்கள் (%) | 8 | 6.2 | 2.3 | 2.5 | 5.1 |
| தனித்து வசிப்பவர்கள் (%) | 15.2 | 3.7 | 11.6 | 11.1 | 5.9 |
| CIDI- SF படிவத்தின்படி மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் (%) | 5.2 | 3.6 | 4.3 | 4.7 | 3.4 |

### 2. வயது சாந்த இறப்பு விகிதம் (1000 நபர்களுக்கு) 2018 (MoSPI) அட்டவணை 3.12 ப.எண். 25

| மாநிலம் | 60-64 | 65-69 | 70-74 | 75 -79 | 80-84 | 85+ |
|---|---|---|---|---|---|---|
| கேரளா | 13.4 | 28.0 | 35.1 | 58.0 | 98.6 | 236.2 |
| தமிழ்நாடு | 15.9 | 29.0 | 42.7 | 62.8 | 76.4 | 123.6 |
| இந்தியா | 19.5 | 31.3 | 47.5 | 66.0 | 106.5 | 174.7 |

### 3. சராசரியாக முறைசார்கல்வி பயின்ற ஆண்டுகளின் எண்ணிக்கை - 60 வயது மற்றும் அதற்கு மேல் (MoSPI) அட்டவணை 5.3 ப.எண். 65

| மாநிலம் | மொத்தம் | | | வட்டாரம் | |
|---|---|---|---|---|---|
| | நபர்கள் | ஆண் | பெண் | ஊரகம் | நகரம் |
| தமிழ்நாடு | 7.7 | 8.4 | 6.6 | 6.7 | 8.3 |
| இந்தியா | 8.3 | 8.7 | 7.5 | 7.0 | 9.7 |

## 4. பிரதம மந்திரிக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ள முதியோர்களின் வாழ்கைத்தர குறியீடு (Link)

இக்குறியீட்டின் பொருளடக்க கட்டமைப்பு நான்கு தூண்காளாக: பொருளாதார நலன், சமூக நலன், மருத்துவ அமைப்பு, வருவாய் பாதுகாப்பு ஆகியவற்றை கொண்டும். எட்டு துணை தூண்களாக: பொருளாதார மேம்பாடு, கல்வி பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு, சமூக நிலை, உடல் சார்ந்த பாதுகாப்பு, அடிப்படை ஆரோக்கியம், மனநலன், சமூக பாதுகாப்பு மற்றும் உகந்த சூழல் போன்றவற்றை கொண்டுள்ளதாகும்.

மாநிலங்களை வயதானோர் மாநிலங்கள் மற்றும் ஓரளவு வயதானோர் மாநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வயதானோர் மாநிலங்கள் என்றால் 5 மில்லியனுக்கும் அதிகமான முதியோர் மக்கள் தொகை உள்ள மாநிலங்கள் எனவும், ஓரளவு வயதானோர் மாநிலங்கள் என்றால் 5 மில்லியனுக்குக குறைந்த முதியோர் மக்கள் தொகை உள்ளோர் மாநிலங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வயதானோர் மாநிலங்கள் என்ற வகைப்பாட்டின் கீழ் 47.93 என்ற மதிப்பீட்டுடன் நான்காவதாக தரவரிசைப் பட்டியலில் உள்ளது.

----------